## பாடம்: 6 - வளம் பெருகுக

**வகுப்பு :** VIII

**பாடம் : தமிழ்**

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தோட்டத்தில் தம்பி ஊன்றிய ........ எல்லாம் முளைத்தன.

அ) சத்துகள் ஆ) பித்துகள் இ) முத்துகள் **ஈ) வித்துகள்**

2. என் நண்பன் செய்த தொழிலில் அவனுக்கு .......... பெருகிற்று.

அ) காரி ஆ) ஓரி இ) **வாரி** ஈ) பாரி

3. 'அக்களத்து' என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...................

**அ) அ + களத்து** ஆ) அக் + களத்து இ) அக்க + அளத்து ஈ) அம் + களத்து

4. கதிர் + ஈன என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ...................

அ) கதிரென ஆ) கதியீன **இ) கதிரீன** ஈ) கதிரின்ன

### ஆ. குறுவினா

**1. பயிர்கள் வாட்டமின்றிக் கிளைத்து வளரத் தேவையானது யாது?**

பயிர்கள் வாட்டமின்றிக் கிளைத்து வளரத் தேவையானது தகுந்த காலத்தில் பொழியும் மழை ஆகும்.

**2. உழவர்கள் எப்போது ஆர்வார ஒலி எழுப்புவர்?**

நெற்போரினை அடித்து நெல்லினைக் கொள்ளும் காலத்தில் உழவர்கள் ஆரவார ஒலி எழுப்புவர்.

### இ. சிறுவினா

**1. உழவுத்தொழில் பற்றித் தகடூர் யாத்திரை கூறுவன யாவை?**

(i) சேர மன்னரின் அகன்ற பெரிய நாட்டில் பெருகிய மழைநீரால் வருவாய் சிறந்து விளங்கியது.

(ii) அகன்ற நிலப்பகுதியில் விதைகள் குறைவின்றி முளைவிட்டன.

(iii) முளைத்த விதைகள் செழிப்புடன் வளரத் தட்டுப்பாடின்றி மழை பொழிந்தது.

(iv) தகுந்த காலத்தில் மழை பொழிவதால் பயிர்கள் வாட்டமின்றிக் கிளைத்து வளர்ந்தன.

(v) கிளைத்துச் செழித்த பயிர்கள் பால்முற்றிக் கதிர்களை ஈன்றன.

(vi) அக்கதிர்கள் அறுவடை செய்யப்பெற்று ஏரினால் வளம் சிறக்கும் செல்வர்களின் களத்தில் வந்து நிறைந்தன.

KOSAVAPATTY KNOWLEDGE IS POWER

(vi) அக்களத்தில் வந்து நிறைந்துள்ள நெற்போர் காவல் இன்றியே விளங்குகிறது.

(vii) போரினை அடித்து நெல்லினைக் கொள்ளும் காலத்தில் உழவர்கள் ஆரவார ஒலி எழுப்புவர். இவையே உழவுத்தொழில் பற்றித் தகடூர் யாத்திரை கூறுவனவாகும்.

**ஈ. சிந்தனை வினா**

**1. உழவுத்தொழில் சிறக்க இன்றியமையாதனவாக நீங்கள் கருதுவன யாவை?**

உழவுத்தொழில் சிறக்க இன்றியமையாதன :

(i) மாறும் சூழலுக்கு ஏற்ப விவசாய முறையை மாற்றுதல்.

(ii) இயற்கை வேளாண்மையில் கிடைக்கும் பொருள்களுக்கு ஏற்ற விலையை நிர்ணயித்தல்.

(iii) விளைநிலங்களை வீடுகளாக மாற்ற அனுமதிக்கக் கூடாது.

(iv) உழவர்களுக்கும் நுகர்வோருக்கும் நேரடித் தொடர்பு இருந்தால் உழவர்களின் பொருளுக்கேற்ற விலை அவர்களுக்குக் கிடைக்கும்.

(v) இளைஞர்கள் விவசாயத்திற்கு வந்து, புதிய அணுகுமுறைகளைக் கொண்டு வர வேண்டும்.

(vi) இதற்கும் மேலாக சுற்றுச்சூழல் மாசுபடாமல் பாதுகாத்து மழையின் அளவு பெருகுவதற்கு வழி வகை செய்ய வேண்டும். பொழிகின்ற மழைநீரைச் சேமித்து நிலத்தடிநீர் உயர்வதற்கான பணியைச் செய்ய வேண்டும்.

## கவிதைப்பேழை - மழைச்சோறு

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கனத்த மழை என்னும் சொல்லின் பொருள் ...................

**அ) பெருமழை** ஆ) சிறு மழை

இ) எடைமிகுந்த மழை ஈ) எடை குறைந்த மழை

2. ‘வாசலெல்லாம்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............

**அ) வாசல் + எல்லாம்** ஆ) வாசல் + எலாம்

இ) வாசம் + எல்லாம் ஈ) வாசு + எல்லாம்

3. ‘பெற்றெடுத்தோம்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...........

அ) பெறு + எடுத்தோம் ஆ) பேறு + எடுத்தோம்

இ) பெற்ற + எடுத்தோம் **ஈ) பெற்று + எடுத்தோம்**

4. கால் + இறங்கி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..................

அ) கால்லிறங்கி **ஆ) காலிறங்கி** இ) கால் இறங்கி ஈ) கால்றங்கி

## ஆ. குறுவினா

**1. மழைச்சோறு பாடலில் உழவர் படும் வேதனை எவ்வாறு கூறப்படுகிறது?**

மழைச்சோறு பாடலில் உழவர் படும் வேதனை :

மழை பெய்யாததால் செடி, கொடிகள் வளரவில்லை. உழவர்களின் பசி தீரவில்லை. மழை இல்லாததால் கலப்பையைப் பிடிக்க இயலவில்லை. ஏற்றம் இறைக்க இயலவில்லை. இவற்றையெண்ணி உழவர்கள் மனம் சோர்ந்து மனம் ஏங்கி வேதனையுற்றனர்.

**2. மக்கள் ஊரைவிட்டு வெளியேறக் காரணம் என்ன?**

உழவர்கள் மழையை வேண்டி வழிபாடு செய்கின்றனர். அதன் பிறகும் மழைபெய்யாததால் ஊரைவிட்டுச் செல்ல முடிவெடுக்கின்றனர்.

## இ. சிறுவினா

**1. கோலம் கரையாத நிலையை மழைச்சோறு பாடல் எவ்வாறு விளக்குகிறது?**

கோலம் கரையாத நிலை:

(i) வாளியில் பச்சரிசி மாவைக் கரைத்து வாசல் முழுவதும் கோலம் போட்டனர். கொள்ளை மழை பெய்யாததால் கோலம் கரையவில்லை.

(ii) பானையில் மாவைக் கரைத்து பாதையெல்லாம் கோலம் போட்டனர். கொள்ளை மழை பெய்யாததால் கோலம் கரையவில்லை.

**2. மழையின்மையால் செடிகள் வாடிய நிலையை விளக்குக.**

(i) கல் இல்லாத காட்டில் கடலைச்செடி போட்டனர்.

(ii) முள் இல்லாத காட்டில் முருங்கைச் செடி நட்டனர்.

(iii) முத்து போன்ற மழை பெய்யாததால் அவையெல்லாம் வாடின என்று பாடுகின்றனர் உழவர்கள்.

**3. மழைச்சோறு எடுத்தபின் எவ்வாறு மழை பெய்தது?**

மழைச்சோறு எடுத்தபின் பேய்மழை பெய்தது. ஊசிபோல நிலத்தில் இறங்கி உலகம் முழுவதிலும் மழை பெய்தது. சிட்டுபோல் மின்னல் மின்னி உலகெங்கும் பொழிந்தது. உலகெங்கும் செல்ல மழை பெய்தது. .

## ஈ. சிந்தனை வினா

**1. மழை வளம் பெருக நாம் செய்ய வேண்டுவன யாவை?**

மழை வளம் பெருக நாம் செய்ய வேண்டுவன :

(i) மரங்கள் வெட்டுவதைத் தவிர்க்க வேண்டும்.

(ii) வெட்டும் மரங்களுக்கு ஈடாக மரக்கன்றுகள் நட வேண்டும்.

(iii) ஆற்று மணலை எடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

(iv) நிலத்தடி நீரைத் தேக்கி வைக்க வேண்டும்.

(v) குளங்கள், ஏரிகள், கண்மாய்கள் ஆகிய நீர்நிலைகளைக் கோடைக் காலங்களில் தூர்வாரி வைத்து மழைக் காலங்களில் நீரைத் தேக்கி வைக்க வேண்டும்.

(vi) சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

## உரைநடை உலகம் - கொங்குநாட்டு வணிகம்

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்று குறிப்பிடும் நூல் ..................

**அ) தொல்காப்பியம்** ஆ) அகநானூறு இ) புறநானூறு ஈ) சிலப்பதிகாரம்

2. சேரர்களின் தலைநகரம் ...............

அ) காஞ்சி **ஆ) வஞ்சி** இ) தொண்டி ஈ) முசிறி

3. பழங்காலத்தில் விலையைக் கணக்கிட அடிப்படையாக அமைந்தது ...........

அ) புல் **ஆ) நெல்** இ) உப்பு ஈ) மிளகு

4. ஆன்பொருநை என்று அழைக்கப்படும் ஆறு ................

அ) காவிரி ஆ) பவானி இ) நொய்யல் **ஈ) அமராவதி**

5. வீட்டு உபயோகப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம் ..................

அ) நீலகிரி ஆ) கரூர் **இ) கோயம்புத்தூர்** ஈ) திண்டுக்கல்

### ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. 'மாங்கனி நகரம்' என்று அழைக்கப்படும் நகரம் **சேலம்**

2. சுங்குடிச் சேலைகளுக்குப் புகழ்பெற்ற ஊர் **சின்னாளபட்டி**

3. சேரர்களின் நாடு **குடகு** எனப்பட்டது.

4. பின்ன லாடை நகரமாக **திருப்பூர்** விளங்குகிறது.

### இ. குறுவினா

**1. மூவேந்தர்களின் காலம் குறித்து எழுதுக.**

மூவேந்தர்களின் காலம்:

(i) தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர்களுக்கு உரியதாகக் கூறுகின்றன.

(ii) வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

(iii) மூவேந்தர்களின் காலத்தை வரையறுத்துக் கூற முடியவில்லை .

(iv) வால்மீகி இராமாயணம், மகாபாரதம், அர்த்தசாத்திரம், அசோகர் கல்வெட்டு ஆகியவற்றில் மூவேந்தர்கள் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளதனால் இவர்கள் பன்னெடுங்காலத்திற்கு முற்பட்டவர்கள் என்பதை அறியலாம்.

**2. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?**

கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் :

(i) காவிரி

(ii) பவானி

(iii) நொய்யல்

(iv) அமராவதி (ஆன்பொருநை)

**3. 'தமிழ்நாட்டின் ஹாலந்து' என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?**

தமிழ்நாட்டின் ஹாலந்து என்று அழைக்கப்படும் ஊர் திண்டுக்கல். காரணம் : இங்கு நெல், சோளம், தினை வகைகள், வாழைப்பழம், காய்கறிகள் போன்றவை விளைவிக்கப்படுகின்றன. மலர் உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்றது.

## ஈ. சிறுவினா

**1. கொங்கு மண்டலச் சதகம் கூறும் கொங்கு மண்டலத்தின் எல்லைகள் யாவை?**

கொங்கு மண்டலச் சதகம் கூறும் கொங்கு மண்டலத்தின் எல்லைகள் :

- கொங்கு மண்டலச் சதகம், கார்மேகக் கவிஞரால் இயற்றப்பட்டது.
- அந்நூலில் வடக்கே பெரும்பாலை, தெற்கே பழனிமலை, மேற்கே வெள்ளிமலை, கிழக்கே மதிற்கரை என இந்நான்கு எல்லைகளுக்குட்பட்ட பகுதியாகக் கொங்கு மண்டலம் விளங்கியதாகக் கூறப்படுகிறது.
- இன்றைய நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களையும் சேலம், கரூர் மாவட்டங்களின் சில பகுதிகளையும் உள்ளடக்கியதாகக் கொங்கு மண்டலம் விளங்கியது என்பர்.
- இங்கு பாயும் ஆறுகள் : காவிரி, பவானி, நொய்யல், அமராவதி

**2. கரூர் மாவட்டம் பற்றிய செய்திகளைச் சுருக்கி எழுதுக.**

கரூர் மாவட்டச் செய்திகள் :

(i) கொங்கு நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய இப்பகுதிக்கு 'வஞ்சி மாநகரம்' என்னும் பெயரும் உண்டு.

(ii) கிரேக்க அறிஞர் தாலமி, கரூரைத் தமிழகத்தின் முதன்மையான உள்நாட்டு வணிக மையமாகக் குறிப்பிட்டுள்ளார்.

(iii) நெல், சோளம், கேழ்வரகு, கம்பு, கரும்பு போன்றவை இங்குப் பயிரிடப்படுகின்றன.

(iv) கல்குவாரித் தொழிற்சாலைகள் இங்கு உள்ளன. கைத்தறி நெசவு ஆடைகளுக்குப் பெயர் பெற்ற மாவட்டமாகக் கரூர் விளங்குகிறது.

(v) தோல் பதனிடுதல், சாயமேற்றுதல், கற்சிற்ப வேலைகள் போன்ற தொழில்களும் நடைபெறுகின்றன.

(vi) பேருந்துக் கட்டுமானத் தொழிலின் சிகரமாகக் கரூர் விளங்குகிறது.

## உ. நெடுவினா

### 1. கொங்கு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக.

கொங்கு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் :

உழவு, கைத்தொழில், வணிகம் என்னும் மூன்றும் ஒரு நாட்டு மக்களின் நாகரிக நல்வாழ்விற்கு அடிப்படைகளாகும் என்பர். உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்தில் தமிழர்கள் சிறந்து விளங்கியுள்ளனர்.

வெளிநாட்டு வணிகம் :

(i) கடல் வணிகத்தில் சேரநாடு சிறப்புற்றிருந்தது. அதற்கு அந்நாட்டின் இயற்கை அமைப்பே காரணமாக அமைந்தது. சேரர்கள் வலிமை மிகுந்த கப்பல் படையை வைத்திருந்தனர்.

(ii) முசிறி சேரர்களின் சிறந்த துறைமுகங்களுள் ஒன்றாக விளங்கியது.

(iii) இங்கிருந்துதான் மற்ற நாடுகளுக்கு மிளகு, முத்து, யானைத் தந்தங்கள், பட்டு, மணி போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன.

(iv) பொன், மென்மைமிக்க புடவைகள், சித்திர வேலைப்பாடமைந்த ஆடைகள், பவளம், செம்பு, கோதுமை ஆகியன இறக்குமதி செய்யப்பட்டன. இச்செய்தியை,

**மீனோடு நெற்குவைஇ**
**மிசையம்பியின் மனைமறுக்குந்து**
…………..
**கலந்தந்த பொற்பரிசம்**
**கழித்தோணியால் கரைசேர்க்குந்து** (புறநானூறு)

என்னும் பாடல் விளக்குகிறது.

**உள்நாட்டு வணிகம் :**

சேரநாட்டில் உள்நாட்டு வணிகமும் நன்கு வளர்ச்சியுற்றிருந்தது. மக்கள் தத்தம் பொருள்களைத் தந்து தமக்குத் தேவையான பொருளைப் பெற்றனர். நெல்லே விலையைக் கணக்கிட அடிப்படையாக இருந்தது என்பர். உப்பும் நெல்லும் ஒரே மதிப்புடையனவாக இருந்தன என்பதை,

**நெல்லும் உப்பும் நேரே ஊரீர்**
**கொள்ளீ ரோவெனச் சேரிதொறும் நுவலும்**

என்னும் அகப்பாடல் மூலம் அறியலாம்.

**கொங்கு மண்டலப் பகுதியில் இன்றைய வணிகம் :**

நீலகிரி, கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, திருப்பூர், நாமக்கல், சேலம், கரூர் ஆகிய மாவட்டங்களில் பல்வேறு தொழில்களும் வணிகமும் சிறப்பாக நடைபெறுகின்றன.

**ஊ. சிந்தனை வினா**

**1. நாட்டு மக்களின் நாகரிக நல்வாழ்விற்கு வணிகம் தவிர்த்து வேறு எவையெல்லாம் உதவும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

நாட்டு மக்களின் நாகரிக நல்வாழ்விற்கு உதவி செய்வன :

(i) வேளாண்மை முன்னேற்றம்
(ii) அறிவியல் வளர்ச்சி
(iii) தொழில் வளர்ச்சி
(iv) தொலைதொடர்பு வசதி
(v) சமூக ஒற்றுமை
(vi) நாட்டின் உற்பத்தியைப் பெருக்குதல்
(vii) கல்வி முன்னேற்றம்
(viii) போக்குவரத்து வசதிகள்
(ix) பண்பாட்டுக் கூறுகளைப் பாதுகாத்தல் போன்றவை நாட்டு மக்களின் நாகரிக நல்வாழ்விற்கு உதவி புரிகின்றன.

## விரிவானம் - காலம் உடன் வரும்

**1. 'காலம் உடன் வரும்' - கதையைச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை :**

துணிகளை நெய்து துறைமுகத்தில் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் அனந்திகா நிறுவனம் சிக்கிக் கொண்டது. இச்சிக்கலை சுப்பிரமணி எவ்வாறு

தீர்த்து வைத்தான் என்பதனையும் அதற்கு உதவிய நெசவுத் தொழிலாளரின் உணர்வுகளையும் வெளிப்படுத்தும் கதையைப் பார்க்கலாம்.

**சுப்பிரமணியனின் கவலை :**

தறியில் பாவு தீர்ந்துவிட்டால், அடுத்த பாவு பிணைக்க ஆளில்லை. ரங்கன் என்பவர் ஊரில் இல்லை. என்ன செய்வதென்று தெரியாமல் சுப்பிரமணி நண்பன் ரகுவைப் பார்க்கச் சென்றார். அவருடைய தறியில் வேலை செய்கிறவர்களை உதவிக்கு அனுப்புமாறு கேட்டார். அங்கும் ஆள் இல்லை என அறிந்ததும் கவலை அதிகமானது.

**ரகுவின் ஆலோசனை :**

சுப்பிரமணியின் கவலையை உணர்ந்த ரகு, மாயழகு என்பவரைப் போய்ப் பார்த்து, அவரது மனைவியை அழைத்துப் போகச் சொன்னார். இரவு நேரத்தில் செல்வதற்குத் தி தயங்கியவன் பிறகு வேறுவழியின்றி அப்பெண்மணியை அழைத்துச் சென்றார்.

**ஒச்சம்மா :**

சுப்பிரமணி பாவு பிணைக்க ஒச்சம்மாவைப் பட்டறைக்குக் காரில் அழைத்துச் சென்றார். குழந்தையைத் தூங்க வைத்துவிட்டு பாவு பிணைக்கத் தொடங்கினாள். அவள் உசிலம்பட்டி பக்கமுள்ள கிருஷ்ணாபுரத்தைச் சார்ந்தவள். மாயழகு கோம்பைத்தொழுவு என்ற ஊரைச் சார்ந்தவன். எதிர்கால நலன் கருதி வெள்ளக்கோயிலில் குடியேறினர். புதிய இடத்தில் அவளுக்கு உணவு, காற்று, நீர், ஒப்பனை எல்லாமும் மாற வேண்டியிருந்தது.

**நெசவுத் தொழிலில் ஒச்சம்மா :**

இயந்திர நேர்த்தி அதிகம் கொண்ட தறித்தொழிலில் பாவு பிணைத்தல், ஒடி எடுத்தல், கோன் போடுதல், எல்லாவற்றையும் சில மாதங்களில் கற்றுக்கொண்டாள். தன் குழந்தையின் கல்வியைப் பற்றி சிந்தித்து இடம் விட்டு இடம் எங்கும் மாறக்கூடாது என்று தீர்மானித்தாள்.

**பாவு பிணைத்தல் :**

மனதில் பலவற்றை எண்ணியபடியே பாவு பிணைந்து கொண்டிருந்தாள். இடையில் அழுத குழந்தைக்குப் பாலூட்டித் தூங்க வைத்தாள். பாவு பிணைப்பின் வேகம் குறைந்ததைப் பார்த்த சுப்பிரமணி தேநீர் வாங்கிவரச் சொல்லிக் கொடுத்தார். தறியில் பணி செய்ய மாணிக்கத்தையும் துரிதப்படுத்தினார் சுப்பிரமணி. ஒச்சம்மாவும் தேநீர் அருந்திவிட்டு சுறுசுறுப்பாக பாவு பிணைந்து முடிந்தாள்.

**வீட்டிற்குத் திரும்பினாள் ஓச்சம்மா :**

வேலை முடிந்ததும் ஒச்சம்மாவிற்கு இரட்டைச் சம்பளம் வழங்கப்பட்டது. அவளது கண்கள் திளைப்பிலும் திகைப்பிலும் ஒரு கணம் ஒளிர்ந்தன. தனது எதிர்காலம் போல் அந்த ரூபாய்த் தாள்களை வலது கையில் இறுக்கிக் கொண்டாள். சுப்பிரமணி அவளை வீட்டில் கொண்டுபோய் விட்டான். மாயழகு வெளியே வந்து பார்த்தான். சுப்பிரமணியைத் தேநீர் குடித்துவிட்டுப் போகுமாறு கூறிவிட்டு, கடையில் வாங்கி வந்த தேநீரைக் கொடுத்தான்.

**முடிவுரை :**

தேநீர் குடித்துக் கொண்டே "ரொம்ப கஷ்டந்தான் நம் தொழிலு" என்றான். மாயழகு "அப்படித்தாண்ணே இருக்கும் எல்லாமும் ...... உங்கள நம்பித்தான் இருக்கோம். இப்படி ஏதும் அவசரம்னா சொல்லுங்கண்ணே ...... எங்களால முடிஞ்சதச் செய்யறம்" என்று கூறினான். சுப்பிரமணியும் விடை பெற்றுச் சென்றார்.

## கற்கண்டு - புணர்ச்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. விகாரப் புணர்ச்சி ............ வகைப்படும்.

அ) ஐந்து ஆ) நான்கு **இ) மூன்று** ஈ) இரண்டு

2. 'பாலாடை' - இச்சொல்லுக்குரிய புணர்ச்சி ......................

**அ) இயல்பு** ஆ) தோன்றல் இ) திரிதல் ஈ) கெடுதல்

### ஆ. பொருத்துக

1. மட்பாண்டம் - திரிதல் விகாரம்
2. மரவேர் - கெடுதல் விகாரம்
3. மணிமுடி - இயல்புப் புணர்ச்சி
4. கடைத்தெரு - தோன்றல் விகாரம்

### இ. சிறுவினா

**1. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இன்றி இணைவது இயல்பு புணர்ச்சி ஆகும்.

எ.கா. தாய் + மொழி = தாய்மொழி

உடல் + ஓம்பல் = உடலோம்பல்

**2. மரக்கட்டில் - இச்சொல்லைப் பிரித்து எழுதிப் புணர்ச்சியை விளக்குக.**

மரக்கட்டில் = மரம் + கட்டில்

நிலைமொழி ஈற்றில் உள்ள மகர மெய் மறைந்து மர + கட்டில் என்றானது. தோன்றல் விகாரத்தின் படி ‘க்’ தோன்றி மரக்கட்டில் என்றானது.

## மொழியை ஆள்வோம்

### அ. மரபுத்தொடர்கள்

நாம் பேச்சிலும் எழுத்திலும் சில மரபுத்தொடர்களைப் பயன்படுத்துகிறோம். அத்தொடர்கள் நம்முடைய கருத்துகளுக்கு வலுசேர்கின்றன. சில மரபுத்தொடர்களுக்கு நேரடிப் பொருள்கொள்ளாமல், அவற்றின் உட்பொருளை அறிந்து பயன்படுத்த வேண்டும்.

(எ.கா.)

1. திண்டுக்கல், பூக்கள் உற்பத்தியில் கொடிகட்டிப் பறக்கும் நகரமாக விளங்குகிறது.

கொடிகட்டிப் பறத்தல் - புகழ்பெற்று விளங்குதல்

2. அவர் ஓர் அவசரக்குடுக்கை

அவசரக்குடுக்கை - எண்ணிச் செயல்படாமை

### ஆ. பின்வரும் மரபுத்தொடர்களைப் பொருளோடு பொருத்துக.

| | |
|---|---|
| ஆயிரங்காலத்துப் பயிர் | நீண்டகாலமாக இருப்பது |
| கல்லில் நார் உரித்தல் | இயலாத செயல் |
| கம்பி நீட்டுதல் | விரைந்து வெளியேறுதல் |
| கானல் நீர் | இருப்பதுபோல் தோன்றும் ;ஆனால் இருக்காது. |
| கண்ணை மூடிக்கொண்டு | ஆராய்ந்து பாராமல் |

### இ. பின்வரும் மரபுத்தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

**1. வாழையடி வாழையாக**

வாழையடி வாழையாக குமரனுடைய குடும்பம் சமூக சேவையில் ஈடுபட்டு வருகிறது.

**2. முதலைக்கண்ணீர்**

மாறன் எப்போதும் முதலைக்கண்ணீர் வடித்து நினைத்தகாரியத்தை முடித்துக்கொள்வான்.

**3. எடுப்பார் கைப்பிள்ளை**

எடுப்பார் கைப்பிள்ளையாய் இல்லாமல் சொந்தமாகச் சிந்தித்து செயல்பட வேண்டும்.

ஈ. கட்டுரை எழுதுக.

## கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்.

### முன்னுரை :

"கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்."

என்றார் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள். இன்றைய இயந்திர வாழ்க்கையில் மக்கள் பொருள் வேண்டி, வேலையைத் தேடி ஓடிக்கொண்டே இருக்கின்றனர்.

### கைத்தொழிலின் அவசியம் :

இன்று நாம் கற்கும் ஏட்டுக்கல்வி பின்னர் நமக்கு ஏதாவது ஒரு வேலையி னைப் பெற்றுத் தரலாம். அல்லது வேலையே கிடைக்காத நிலையும் ஏற்படலா ம். படித்துவிட்டு வேலையின்றித் தவிப்போர் ஏதேனும் ஒரு கைத்தொழில் செய்யத் தெரிந்தவராக இருந்தால் கவலைப்படத் தேவையில்லை. எதிர்கால வாழ்வு குறித்தும் கவலையோ வருத்தமோ கொள்ள வேண்டியதில்லை. ஆகை யால் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு கைத்தொழிலைத் தெரிந்து வைத் துக் கொள்ளுதல் நல்லது.

### கைத்தொழில்கள் :

கைத்தறி நெசவு, செக்காடுதல், பாய் பின்னுதல், கூடைப் பின்னுதல், தச்சு வேலை செய்தல், கயிறு திரித்தல், மட்பாண்டம் செய்தல், தீப்பெட்டி செய்தல், மரவேலை செய்தல், தேனீ வளர்த்தல், தச்சுவேலை செய்தல் போன்ற கைத்தொழில்களை எளிதாகக் கற்றுக் கொண்டு பயன் பெறலாம்.

### கைத்தொழிலின் பயன்கள் :

"கைத்தொழிலைக் கற்றுக் கொள்வதால் தனிமனித வருவாய் பெருகி வளம் பெறலாம். அனைத்து மக்களுக்கும் வேலைவாய்ப்புக் கிடைக்கின்றது. கிராம மக்கள் வேலை தேடி நகரை நோக்கிச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவரவர் ஊர்களில் இருந்தே வேலை செய்யலாம். தொழில் வளம் பெருகுவதால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் பெருகும்.

### இன்றைய கைத்தொழில்கள் :

கால மாற்றம், இட வேறுபாடுகளுக்கேற்ப வாழ்க்கை முறையில் பயன்பாட்டுப் பொருள்கள் மாறுகின்றன. புதிய நாகரிகம், புதிய விருப்பங்கள் என எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே உள்ளன. இம்மாற்றங்களுக் கேற்ப கணினி பழுதுபார்த்தல், செல்பேசி பழுது பார்த்தல், ரப்பர் ஸ்டாம்ப்

தயாரித்தல், எம்ப்ராய்டிங், சிறுசிறு உணவகங்கள் வைத்தல். இவையெல்லாம் இன்றைய சிறந்த கைத்தொழில்கள் ஆகும்.

### முடிவுரை :

நம் வாழ்வை உயர்த்துவது உழைப்புதான். இவ்வுழைப்பை மூலதனமாக வைத்து ஏதேனும் ஒரு கைத்தொழிலைக் கற்றுக் கொண்டு முன்னேறுவோம். படித்த படிப்பிற்கு வேலை தேடி அலையாமல் கைத்தொழில் மூலம் பொருள் ஈட்டி வளம் பெறுவோம்.

## மொழியோடு விளையாடு

### அ. குறுக்கெழுத்துப் புதிர்.

**ஊர்களையும் அவற்றின் சிறப்புகளையும் அறிவோம்!**

**இடமிருந்து வலம்**

1. சிவகாசி
5. திருபாச்சி
7. திருநெல்வேலி
12. கோவில்பட்டி

**மேலிருந்து கீழ்**

1. காஞ்சிபுரம்
2. சேலம்
4. பழனி

**வலமிருந்து இடம்**

3. மதுரை
4. பண்ருட்டி
9. தஞ்சாவூர்
10. மணப்பாறை

**கீழிருந்து மேல்**

6. தூத்துக்குடி
8. ஸ்ரீவில்லிப்புத்தூர்
11. திண்டுக்கல்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | ட் | டா | சு | | | 2 மா | | | |
| ட் | | டி | க | ங் | 3 சு | ம் | பு | | |
| டு | | | | ம் | ழ | ப | ப் | லா | 4 ப |
| நெ | 5 அ | ரி | வா | ள் | | ழ | 6 உ | | ஞ் |
| ச | | | கோ | | | ம் | | | சா |
| வா | | 7 அ | ல் | வா | | | | | மி |
| லை | | | 8 பா | | | டு | | | ர் |
| | | மை | ம் | பொ | டி | ட் | யா | லை | 9 த |
| கு | க் | று | 10 மு | | | 11 பூ | | | ம் |
| 12 க | ட | லை | மி | ட் | டா | ய் | | | |

### ஆ. கலைச்சொல் அறிவோம்.

1. நூல் - Thread
2. தறி - Loom
3. பால்பண்ணை - Dairy farm
4. தோல் பதனிடுதல் - Tanning
5. தையல் - Stitch
6. ஆலை - Factory
7. சாயம் ஏற்றுதல் - Dyeing
8. ஆயத்த ஆடை - Readymade Dress